සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
**Sabaragamuwa Provincial Department of Education**

| | |
|---|---|
| පළමු වාර පරීක්ෂණය - 2016 | 10 ශ්‍රේණිය |
| முதலாம் தவணைப் பரீட்சை 2016 | தரம் 10 |
| **First Term Test - 2016** | **Grade 10** |
| පුරවැසි අධ්‍යාපනය *I* | *පැය 01* |
| *குடியியற்கல்வி I* | ஒரு மணித்தியாலம் |
| ***Civics I*** | ***One hour*** |

பெயர்/சுட்டெண் :- ……………………………………………………………………………………………

- **கவனிக்கவும்.**
- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக. இவ்வினாத்தாளுக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.**
- **இல. 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

**1.** "சனநாயக ஆட்சி அனைவரதும் உரிமைகளையும் பெற்றுக்கொள்ளும் ஆட்சி முறையாகும்" என்ற வரைவிலக்கணத்தை முன்வைத்தவர்,
I.சீலர் II.ஜே.ஏ.லவல் III.ஆபிரகாம் லிங்கன் IV.அரிஸ்டோட்டில்

**2.** "Demos" என்ற சொல்லின் பொருள்
I.எண்ணக்கரு II.ஆட்சி III.மக்கள் IV.மக்களாட்சி

**3.** மக்கள் நேரடியாக அரசாட்சி நடவடிக்கைகளில் பங்குபற்றும் ஆட்சி முறையாவது
I. பிரதிநிதித்துவ சனநாயகம் II. தாராண்மை சனநாயகம்
III. நேரடி சனநாயகம் IV. அரசியலமைப்பிற்குட்பட்ட சனநாயகம்

**4.** கி.பி.6ம் நூற்றாண்டில் இந்தியாவில் குழுவாட்சி முறை நிலவிய குடியேற்றம்
I.அங்கம் II.மகதம் III.கோசலம் IV.வஜ்ஜி

**5.** கி.பி. 5ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் நிலவிய சமுதாய அமைப்பு
I.மன்னராட்சி II.நிலமானிய சமுதாய முறை
III.சமஸ்டி ஆட்சி IV.சனநாயகம்

**6.** ஆங்கில புரட்சி நடைபெற்ற ஆண்டு
I. 1688 II. 1588 III. 1786 IV. 1816

**7.** இலங்கையில் தற்போது காணப்படும் தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை
I. 22 II. 24 III. 25 IV. 20

**8.** அரசுகளின் மூலக்கூறுகளில் உள்ளடங்காதது
I. இறைமை II. நிலம் III. உழைப்பு IV. அரசாங்கம்

**9.** ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற முதலாவது தேசிய அரசுகளாவன
I. இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் II. இங்கிலாந்து மற்றும் ஸ்பானியா
III. ஜேர்மன் மற்றும் இத்தாலி IV. ஜேர்மன் மற்றும் ஜப்பான்

**10.** சட்டத்துறையின் செயற்பாடு அல்லாதது
I. நிதி நிர்வாகம் II. சட்டத்தை உருவாக்குதல்
III. நீதியை நடைமுறைப்படுத்துதல் IV.நிறைவேற்றுத்துறையை வழிநடத்துதல்

❖ **வினா இல. 11 – 20 வரையான வினாக்களுக்கு சரியாயின் ( √ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுக.**

**11.** ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமாக அமைவது அந்நாட்டின் அரசியல் அமைப்பு சட்டமாகும். (      )

**12.** மனித உரிமைகளைப் பாதுகாப்பது அரசியல் அமைப்பின் கடமையாகும். (      )

**13.** நீதியானதும் நியாயமானதுமான தேர்தலை நடாத்துதல் நல்லாட்சியின் பண்பாகும். (      )

**14.** பாராளுமன்ற அரசாங்க முறை மற்றும் ஜனாதிபதி அரசாங்க முறைமைக்குமிடையில் நேரடி தொடர்பில்லை. (      )

**15.** ஒரு மத்திய அரசின் கீழ் அனைத்து நிர்வாக செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்படும் அரசாங்கத்தைக் கொண்ட நாடு அரசு ஒற்றையாட்சி நாடாகும். (      )

**16.** மக்கள் தீர்ப்பு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் நேரடி ஜனநாயக உத்தியன்று. (      )

**17.** இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி வில்லியம் கொபல்லாவ ஆவார். (      )

**18.** அரசாங்கம் ஓர் நிலையான நிறுவனமாகும். (      )

**19.** இலங்கையில் காணப்படும் இறுதியான நீதிமன்றமாக கருதப்படுவது உயர்நீதிமன்றமாகும். (      )

**20.** 1948ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் திகதி மனித உரிமைப் பிரகடனம் வெளியிடப்பட்டது. (      )

❖ **வினா இல. 21 – 30 வரையான வினாக்களுக்கு சரியான விடையினை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

**21.** சுதந்திரம் , சமத்துவம் மற்றும் ...................................... என்பன ஜனநாயகத்தின் அடிப்படைகள் ஆகும்.

**22.** இலங்கையின் மிகப்பெரிய மாகாணம் ................................................................................

**23.** இலங்கையில் ............................................................ கட்சிமுறை நிலவுகிறது.

**24.** பாராளுமன்ற அரசாங்க முறையில் உண்மை நிர்வாகி ............................................... ஆவார்.

**25.** இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை .................................. ஆகும்.

**26.** இலங்கையின் தேர்தல் தொகுதிகள் ............................................. மூலமாக பிரிக்கப்படுகின்றன.

**27.** 'வெளித்தடைகளற்ற விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்வதற்கான நிலமை சுதந்திரமாகும்' என்று கூறியவர் ................................................. ஆவார்.

**28.** இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் ................................... வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும்.

**29.** ஜனாதிபதி அரசாங்க முறையில் அரசின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் ............................. ஆவார்.

**30.** சமூக நன்மைக்காக உரிமைகள் போன்றே ................................................ அவசியமாகும்.

❖ **வினா இல. 31 – 40 வரையான வினாக்களுக்கு சரியான அல்லது மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

**31.** இலங்கையில் தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும்போது கவனத்தில் கொள்ளப்படும் பிரதான அளவீட்டு நியதிகள் அடங்கிய விடை எது?

I.நிலம், மக்கள்
II.நிலப்பரப்பு, சனத்தொகை
III.நிலம், சனவிகிதம்
IV.நிலம், வாக்குத்தொகை

**32.** சுதந்திர ஊடகங்களின் கடமையும் பொறுப்பும் அல்லாதது

I.சரியான தகவல்களை வழங்குதல்
II.பக்கச்சார்பான வகையில் தகவல் வழங்குதல்
III.மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவுதல்
IV.ஆட்சியாளர்களை சனநாயக வழியில் இட்டுச் செல்லுதல்.

**33.** சட்டவாட்சியின் பண்பு

I.சட்டத்திற்கு மதிப்பளித்தல்
II.சட்டத்தை சமமான முறையில் நடைமுறைப்படுத்துதல்.
III.அனைத்த துறைகளையும் விட சட்டமே மேலானது.
IV.அனைவரும் சட்டத்திற்கு மதிப்பளித்தல்

**34.** பாராளுமன்ற அரசாங்க முறையில் நிறைவேற்றுத்துறை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படும் முறை

I.ஜனாதிபதி தேர்தலினூடாக
II.மாகாணசபை தேர்தலினூடாக
III.பாராளுமன்றத்திலிருந்து
IV.உள்ளூராட்சி தேர்தலினூடாக

**35.** 2016 பெப்ரவரி 4ம் திகதி இலங்கையின் எத்தனையாவது சுதந்திரதினம் கொண்டாடப்பட்டது?

I. 65
II. 68
III. 66
IV. 63

**36.** பிரஜைகளின் சட்டரீதியான கடமையாவது

I. மூத்தோரை மதித்தல்
II. சமூகப்பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தல்
III. அரசுக்குரிய வரியை செலுத்துதல்
IV. சூழலை பாதுகாத்தல்

**37.** பாராளுமன்ற அரசாங்க முறையை பின்பற்றும் நாடு

I. இந்தியா
II. அமெரிக்கா
III. இலங்கை
IV. சீனா

**38.** கூட்டாட்சி நாடுகளில் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையில் பிரச்சினைகள் , பிணக்குகள் ஏற்படின் அவற்றை தீர்த்து வைப்பது

I.ஜனாதிபதியினூடாக
II.பிரதமரினூடாக
III.உயர் நீதிமன்றத்தினூடாக
IV.கீழ் நீதிமன்றங்களினூடாக

**39.** சனநாயக பிரஜையொருவரிடம் காணப்படவேண்டிய பண்பு அல்லாதது

I.கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களுக்கு வரல்
II.உரிமைகளை அனுபவிப்பதோடு கடமைகளை நிறைவேற்றாமை
III.சட்டத்திற்கு மதிப்பளித்தல்
IV.பெரும்பான்மைக் கருத்துக்கு மதிப்பளித்தல்

**40.** தேசிய அரசின் தோற்றத்திற்கான காரணிகள்

I.விஞ்ஞான மறுமலர்ச்சி
II.குடியேற்றவாதம்
III.இடப்பெயர்வு
IV.சர்வதேச வர்த்தகம்

( 40 X 1 = 40 புள்ளிகள்)

e-thaksalawa National e-learning Portal for The General Education

සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
**Sabaragamuwa Provincial Department of Education**

| | |
|---|---|
| පළමු වාර පරීක්ෂණය - 2016 | 10 ශ්‍රේණිය |
| முதலாம் தவணைப் பரீட்சை 2016 | தரம் 10 |
| **First Term Test - 2016** | **Grade 10** |

| | | |
|---|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය | ***II*** | *පැය 02* |
| *குடியியற்கல்வி* | ***II*** | **இரண்டு மணித்தியாலம்** |
| ***Civics*** | ***II*** | ***Two hours*** |

❖ பின்வரும் வினாக்களுல் முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

**01.**

I. சனநாயகம் குறித்து வரைவிலக்கணங்களை முன்வைத்த அறிஞர்கள் இருவரின் பெயர்களைத் தருக.

II. சனநாயகத்தின் இரு வகைகளைக் குறிப்பிடுக.

III. ஒரு கட்சி முறை நிலவும் நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

IV. சனநாயக வாழ்க்கை முறையின் முக்கியத்துவம் இரண்டினைக் குறிப்பிடுக.

V. கிரேக்கத்தில் நேரடி சனநாயக ஆட்சியில் பங்குகொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாத இரு தரப்பினரைக் குறிப்பிடுக.

VI. பிரஜைகளின் கடமைகள் இரு வகைப்படும். அவை எவை?

VII. தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய பிரதான அளவீட்டு நியதிகள் இரண்டு தருக.

VIII. சனநாயக பிரஜையொருவரிடம் காணப்படவேண்டிய பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

IX. அரசின் பிரதான வகைகள் இரண்டினையும் குறிப்பிடுக.

X. அரசாங்கத்தின் துறைகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

( 10 X 2 = 20 புள்ளிகள்)

**02.**

I. சனநாயகம் என்றால் என்ன என விளக்குக. ( 2 புள்ளிகள்)

II. நேரடி சனநாயக ஆட்சி முறையினை தற்காலத்தில் நடைமுறைப்படுத்த முடியாமைக்கான காரணங்கள் 03 தருக. ( 3 புள்ளிகள்)

III. வஜ்ஜி எனும் குடியேற்ற ஆட்சியில் சனநாயக ஆட்சி முறையின் பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு அதில் ஒன்று சனநாயக ஆட்சியில் தொடர்புபடும் விதத்தினை விளக்குக. ( 5 புள்ளிகள்)

**03.**

I. சர்வசன வாக்குரிமை என்றால் என்ன? ( 2 புள்ளிகள்)

II. சனநாயக ஆட்சிமுறையின் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

III. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைப் பற்றி விளக்குக. ( 5 புள்ளிகள்)

**04.**

I. "அரசு" என்பதற்கு அரிஸ்டோட்டில் முன்வைத்த வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுக. ( 2 புள்ளிகள்)

II. தேசிய அரசின் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

III. அரசின் பொறுப்புக்கள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை உமது மொழிநடையில் விளக்குக. ( 5 புள்ளிகள்)

**05.**

I. தற்கால அரசுகளில் செயற்படுத்தப்படும் அரசாங்க வகைகள் இரண்டையும் குறிப்பிடுக. ( 2 புள்ளிகள்)

II. பாராளுமன்ற அரசாங்கமுறையின் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

III. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் அரசாங்க முறையைக் குறிப்பிட்டு அதன் தலைவரிடம் காணப்படும் அதிகாரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. ( 5 புள்ளிகள்)

**06.**

I. அரசியல் யாப்பு என்றால் என்ன? ( 2 புள்ளிகள்)

II. அரசியல் யாப்பில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

III. அரசியல் யாப்பிற்கிணங்க செயற்படுவதன் ஊடாக கிடைக்கும் நன்மைகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைப் பற்றி விளக்குக. ( 5 புள்ளிகள்)

**07.**

I. சட்டங்கள் என்றால் என்னவென தெளிவான வரையறுக்குக. ( 2 புள்ளிகள்)

II. பாடசாலை மாணவர் என்ற வகையில் உமக்கு காணப்படும் உரிமைகள் மூன்றைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

III. சனநாயக ஆட்சி வெற்றி பெற தேவையான காரணிகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைப் பற்றி விளக்குக. ( 5 புள்ளிகள்)